<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு</u>

**COS**.6/2022

பெயர்- ஹேமநாதன் தேதி:29.11.2022

வா.சா.1 மீண்டும் ஆஜர். சத்தியப் பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

2017 ம் வருடம் அக்டோபர் 6 ம் தேதி நான் பிரதிவாதிக்கு ஒரு மின் அஞ்சல் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அந்த மின் அஞ்சலில் 08.10.2013 ம் தேதி வரை வாதி நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்ட வேலையை முடித்து கொடுத்துவிட்டு வாதி நிறுவனத்திற்கு பிரதிவாதி நிறுனவத்திடமிருந்து வரவேண்டிய பாக்கி தொகை ரூ.13,60,174/-ஐ பலமுறை கேட்டும், 4 வருடங்கள் முடிந்தபிறகும், பிரதிவாதி நிறுவனம் பணத்தை திருப்பி கொடுக்காமல் உள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2017 ம் வருடம் டிசம்பர் 31 ம் தேதி நான் பிரதிவாதிக்கு அனுப்பிய மின் அஞ்சலில் பலமுறை கேட்டும், தொகையை திருப்பி தராத காரணத்தினால் பிரதிவாதி மீது சிவில் மற்றும் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யபோவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தமிழ்நாட்டில் பல ஊர்களில் வேலை செய்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் எந்தெந்த வருடத்தில் எவ்வளவு வேலை செய்து கொடுத்துள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் கர்நாடகா மாநிலம் பெல்லாரியிலும், எந்தெந்த ஊரில், எந்தெந்த வருடத்தில் எவ்வளவு வேலை செய்து கொடுத்துள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2011 ம் வருடம் எங்களுக்கும், பிரவாதிகளுக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில் மற்ற மாநிலங்களில் தொடர்ந்து வேலை செய்ததற்கான தனிப்பட்ட எழுத்துமூலமான ஒப்பந்தம் எதுவும் போடப்படவில்லை என்றால் சரிதான். தமிழ்நாட்டில் செய்த வேலைகளுக்கான தொகை எனக்கு கொடுக்கப்பட்டுவிட்டதா என்றால் எல்லா மாநிலங்களிலும் செய்த வேலைக்கு

சேர்த்து மொத்தமாகதான் தவணை தவணையாக தொகை கொடுக்கப்பட்டது. முதலில் எனக்கு தமிழ்நாட்டில்தான் வேலை கொடுக்கப்பட்டது என்றாலும், பின்னிட்டுதான் மற்ற ஊர்களில் எங்களுக்கு வேலை வழங்கப்பட்டது என்றால் சரிதான். தமிழ்நாட்டில் வேலை செய்து முடித்தபிறகுதான் கர்நாடகா மாநிலத்தில் வேலை செய்தோம் என்றால் சரிதான். தமிழ்நாட்டில் வேலை முடித்து தொகை பெற்று கொண்டதற்கு பின்னிட்டுதான் பிறகு மாநிலங்களில் வேலை செய்ய ஒப்புக்கொண்டோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு வெளி மாநிலங்களில் ஒதுக்கப்பட்ட வேலைகளுக்காக குறித்த நேரத்தில் அதற்கான வேலை ஆட்களை அனுப்பாத காரணத்தினால்தான் மேற்படி பணி பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. Invoice Raise செய்ததாக கூறியுள்ள நிலையில் எந்த தேதியில் அவ்வாறாக Invoice Raise செய்யப்பட்டது என்றால் அன்றன்று செய்யப்படும் வேலைகளுக்குரிய விவரங்களை (pocket) அன்றன்று அனுப்பி விடுவோம். ஒரு நபருக்கு ஆதார் பதிவுகளுக்குண்டான சங்கதியை Pocket என்று குறிப்பிடுவோம். எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையேயான ஒப்பந்ததின்படி தினம் 50 pocket, மாதம் 1300 pocket முடிக்கவேண்டியது என்ற விதி உள்ளது என்றால் சரியல்ல. தற்சமயம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் "Minimum Target of 50 enrollements per day or 1300 for one month" என்றும், "In case it is not met a penalty will be levied" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றன்றைய அனைத்து வேலை குறித்ததான விவரங்களை அன்றன்றே மின் அஞ்சல் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பி விடுவது வழக்கம். அந்த விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிக்கு நான் அனுப்பிய மின் அஞ்சல் பதிவுகளை மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், பிரதிவாதியால் எனக்கு அனுப்பப்பட்ட மின் அஞ்சல் பதிவுகளை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் கடைசியாக எப்பொழுது இன்வாய்ஸ் என்னால் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடபடவில்லை என்றால்

அதற்கான கணக்கு வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன். பெல்லாரி, கோஸ்பட், கோப்பல் ஆகிய பகுதிகளில் நாங்கள் செய்த வேலைகளில் 2099 பதிவுகள் அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி சொல்லிதான் தெரியும். ரூ.2,76,319/- தண்ட தொகையாக கழித்து கொள்ளவேண்டியது என்று பிரதிவாதிகளால் எப்போது எங்களுக்கு சொல்லபட்டது என்றால் 50 லட்சத்திற்கு மேல் எங்களுக்கு வரவேண்டியது என்று குறித்து பிரதிவாதிகளிடம் சொன்ன சமயத்தில் மேற்படி ரூ.2,76,319/- தண்ட தொகையாக கழித்துகொண்டு மீதி தருவதாக பிரதிவாதிகளால் எப்போது சொல்லப்பட்டது என்றால் வருடம், தேதி நினைவில் இல்லை. ரூ.2,76,319/- தண்ட தொகை என்பது நாங்கள் அனைத்து மாநிலங்களில் செய்த வேலைகளுக்கான மொத்த தண்ட தொகையா அல்லது ஏதேனும் ஒரு மாநிலத்தில் செய்த வேலைகளுக்கான தண்ட தொகையா என்றால் அவர்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை. பிரதிவாதிகளுக்கு அவர்கள் வரவேண்டிய தொகையை பாங்க் ஆப் பரோடா மற்றும் அஞ்சலக துறையில் இருந்து பெற்றுக்கொண்டார்கள் என்று தெரியவந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த தேதியில் எப்போது தெரியவந்தது என்றால் வருடம், தேதி நினைவில் இல்லை. பிரதிவாதிகள் மேற்படி தொகையை பெற்றுக்கொண்டதாக யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் குறிப்பான நபர்கள் சொல்ல இயலாது. பாங்க் ஆப் பரோடா மற்றும் அஞ்சலக துறையில் எந்த அதிகாரிடம் மேற்படி சங்கதியை கேட்டு தெரிந்து கொண்டேன் என்று என்னால் சொல்ல இயலாது. அவ்வாறு பாங்க் ஆப் பரோடா மற்றும் அஞ்சலக துறையில் எந்த அதிகாரியையும் நான் சந்தித்து நான் விசாரிக்கவில்லை என்றாலும், அதனால்தான் அதுகுறித்து என்னால் சொல்ல இயலவில்லை என்றாலும் சரிதான். பிரதிவாதிகளால் ரூ.13,60,174/- தொகையை தருவதாக ஒப்புக்கொள்ளபடவில்லை என்றாலும், அதனால்தான் அதுகுறித்து மின் அஞ்சல்களையோ, ஆவணங்களையோ என்னால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2013ம் வருடத்திலேயே நாங்கள் எங்களுடைய வேலையை முடித்துவிட்டோம் என்றாலும், அதுகுறித்தான எங்களுக்கு வரவேண்டிய தொகைகள் குறித்து 2013ம்

வருடத்திலேயே பிரதிவாதிகளிடம் கேட்டோம் என்றாலும் சரிதான். பிரதிவாதிகள் 30.08.2014 ம் தேதி கடைசியாக ரூ.4,00,000/- எங்களுக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 06.01.2015 ம் தேதி ரூ.10,00,000/- பிரதிவாதிகளால் எங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ரூ.10,00,000/-ஐ தொகையை ரொக்கமாக பிரதிவாதிகளால் எங்களுக்கு கொடுக்கப்பட்டது. அவ்வாறு மேற்படி ரூ.10,00,000/- தொகை ரொக்கமாக பிரதிவாதிகளால் எங்களுக்கு கொடுக்கப்பட்டது என்று பிராதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 30.08.2014 ம் தேதி கடைசியாக ரூ.4,00,000/- பிரதிவாதிகளால் எங்களுக்கு கொடுக்கப்பட்டது என்ற நிலையில் 29.08.2017 ம் தேதிக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டியது என்றாலும், 05.01.2018 ம் தேதி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற நிலையில் இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ரூ.20,000/-க்கு மேல் பணபரிவர்த்தனை செய்யவேண்டி இருப்பின் காசோலை மூலமாகவோ, அல்லது வங்கி பரிவர்த்தனை மூலமாகதான் செய்யவேண்டிய விதி எனக்கு தெரியும் என்றால் சரிதான். 06.01.2015 ம் தேதி ரூ.10,00,000/- பிரதிவாதிகளால் எங்களுக்கு கொடுக்கப்பட்டதாக குறிப்பிடபட்டுள்ள நிலையில் மேற்படி தொகை எங்கு வைத்து யாரால் கொடுக்கப்பட்டது என்றால் பிரதிவாதிகள் நிறுவனத்தின் மேலாளர் எம்.என்.ஜெகநாத் மூலமாக கொடுக்கப்பட்டது. நான் சொல்வதுபோல் பிரதிவாதிகள் நிறுவனத்தில் மேலாளர் எம்.என்.ஜெகநாத் என்று யாருமே இல்லை என்றால் சரியல்ல. 06.01.2015 ம் தேதி ரூ.10,00,000/- பிரதிவாதிகளால் எங்களுக்கு கொடுக்கப்பட்டதாக குறிப்பிடபட்டுள்ள நிலையில் அதற்கான ரசீது எதுவும் எங்களால் பிரதிவாதிகள் வசம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி ரூ.10,00,000/- பெறப்பட்டது குறித்து எங்களுடைய வருமானவரியில் காட்டப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை, ஆடிட்டரிடம் கேட்டுதான் சொல்லமுடியும். நான் மேற்படி ரூ.10,00,000/- தொகையை பிரதிவாதிகளிடமிருந்து சொன்ன தேதியில், சொன்ன வகையில் பெறப்படவில்லை என்றாலும், அதனால்தான் மேற்படி தொகை வருமான வரி

கணக்கில் காட்டப்படவில்லை என்றாலும் சரியல்ல. 01.04.2014 முதல் 30.04.2015 வரையிலான நிதி ஆண்டிற்குண்டா வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்ய இயலும். நீங்கள் பணம் கேட்டு மின் அஞ்சல் அனுப்பும்போது பிரதிவாதிகள் அவர்களுக்கு வரவேண்டிய தொகையை மேல் இருந்து எதிர்பார்த்து கொண்டிருப்பதாகவும், வந்தவுடன் எங்களுக்கு செலுத்தவேண்டிய தொகையை தந்துவிடுவதாக கூறினார்களா என்றால் ஆமாம். பிரதிவாதிகளுக்கு பணம் திருப்பி வராததற்கு காரணம் எங்களை போன்ற நபர்களிடம் கொடுக்கப்பட்ட வேலையை நாங்கள் சரிவர செய்து முடிக்காத காரணத்தினாலும் எங்களுடைய வேலைகளில் குறைபாடு இருந்த காரணத்தினாலும், பிரதிவாதிகளுக்கு பாங்க் ஆப் பரோடா மற்றும் அஞ்சலக துறையில் இருந்து வரவேண்டிய தொகையில் ரூபாய் 2 கோடிக்கு மேலான தொகையை பிடித்து வைக்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எங்களுக்கு பதில் எதுவும் கொடுக்கப்படவில்லை. எங்களுடைய வேலையில் குறைபாடு உள்ள பதிவுகளில் கண்டறியப்பட்டுள்ள 2099 பதிவுகளை சரிசெய்து கொடுக்கவேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது என்றால் அவ்வாறு எங்களுக்கு எந்த பதிலும் வரவில்லை. வேலை செய்ததது சம்மந்தமாக பில் எவ்வாறு Raise செய்யவேண்டியது என்று வா.சா.ஆ.3 ஒப்பந்ததில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பிரதிவாதி நிறுவனத்திடம் பில் அனுப்பினோமா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் வழக்கு மூலத்தில் 11.10.2011 ம் தேதி ஒப்பந்தம் போட்டது 06.01.2015 ம் தேதி தொகை கொடுக்கப்பட்டதாக குறிப்பிடபடுவது ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் எங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலை எப்போது முடிக்கப்பட்டது என்று தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்தியோ எங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலை எப்போது முடிக்கப்பட்டது என்று தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை நாங்கள் முடித்து அதை நாங்கள் பிரதிவாதி நிறுவனத்திடம் அனுப்பி, அங்கிருந்து பிரதிவாதி நிறுவனத்தால்

பாங்க் ஆப் பரோடாவிற்கும், அஞ்சல் துறைக்கும் அனுப்பப்பட்டு பின் அது சரியாக இருக்கும்பட்சத்தில்தான் தொகை வழங்கப்படும் என்றால் சரியாக இருந்ததால்தான் அதை எடுத்துக்கொள்வார்கள். ஆந்திரபிரதேசத்திலும் நாங்கள் பிரதிவாதிகள் நிறுவனம் சம்மந்தமாக வேலை செய்தோம் என்றால் சரியல்ல. எங்களால் செய்யப்பட்ட வேலைகளில் 2099 பதிவுகளில் குறைபாடுகள் உள்ளதாக பிரதிவாதிகளால் சொல்லப்படும் நிலையில் அவற்றை நிவர்த்தி செய்யப்படக்கூடுமா என்றால் மேற்படி வேலை ஒருமுறை செய்துவிட்டால் அதை திரும்ப மாற்றவோ, சரிசெய்யவோ இயலாது. நாங்கள் செய்து கொடுத்த வேலைகளில் தற்சமயமும் குறைபாடுகள் உள்ளன என்றால் சரியல்ல. ஏற்கனவே நாங்கள் செய்த வேலைகளில் குறைபாடுகள் இருந்த காரணத்தினால்தான் தண்ட தொகையை ரூ.2,76,319/-ஐ ஏற்றுக்கொண்டோம் என்ற நிலையில் அதற்கு பின்னிட்டு நாங்கள் செய்த வேலைகளிலும் குறைபாடுகள் உள்ளன என்றால் சரியல்ல, பிரதிவாதிகளே எங்களுடைய வேலைகளில் குறைபாடுகள் உள்ளன என்று சொல்லிக்கொண்டுள்ளனர். எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட எழுத்துமூலமான ஒப்பந்தமானது தமிழ்நாட்டில் வேலை செய்வது சம்மந்தமாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த மட்டுமே என்றாலும், அதன் பின்னிட்டு எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட வாய்மொழியான ஒப்பந்தங்கள் வெளி மாநிலங்கள் வேலை சம்மந்தமானவை என்றாலும், அந்த வெளி மாநில வேலை சம்மந்தமான தொகைகளை வசூல் செய்யவேண்டிய இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய ஆள்வரையை இல்லை என்றால் சரியல்ல, தமிழ்நாட்டில்தான் ஒப்பந்தம் போட்டோம், தமிழ்நாட்டில் ஒருபகுதி வேலை செய்தோம், எஞ்சிய பகுதி வேலையை வெளி மாநிலத்தில் செய்தோம், தொகை கொடுக்கப்பட்டது மற்றும் வங்கி வரவு செலவுகள் அனைத்தும் தமிழ்நாட்டில்தான் நடந்தது, அதனால்தான் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். 5 வருடங்களுக்கு மேலாக பிரதிவாதிகளிடம் இருந்து நாங்கள் செய்த வேலைகளுக்கு தொகை முழுவதும் வரவில்லை என்று நானே குறிப்பிட்டுள்ள நிலையில் இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டது என்றாலும், தள்ளுபடி செய்யப்படதக்கதல்ல

என்றால் சரியல்ல. Phase I and Phase II வேலைகள் தனித்தனியே எப்போது ஆரம்பிக்கப்பட்டது, முடிக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளிடம் இருந்து எங்களுக்கு வரவேண்டிய ரூ.13,60,174/- தொகை விவரத்தை தவிர மற்ற எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எல்லா விவரமும் நான் கொடுத்துள்ளேன். நான் தாக்கல்செய்துள்ள வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல, வழக்கு சட்டப்படி தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான் கொடுத்துள்ள ஆவணங்கள் அனைத்தும் உண்மையானவைதான்.